## கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி

## S.C No. 56 /2020

2022– வருடம் பிப்ரவரி மாதம் 1–ம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873–ம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லட்சுமி (அ.சா.–3) | தொழில் | : | |
| த/பெ., க/பெ. | : | | வயது | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலுகா | : | | நாள் | : | 01.2.2023 |
| மாவட்டம் | : | | | | |

1–ம் எதிரி – ஐய்யப்பன் ஆஜர்
2–ம் எதிரி – குட்டி என்ற சுகுமார் ஆஜர்

முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.)

நான் தற்போது பழனி அடிவாரம் குரும்பர் மடத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்குத் தெரியும். அ.சா.–1 எனது மருமகன். அ.சா.–2 எனது மகள். கடந்த 4.4.2018–ம் தேதி எனது மருமகன் வீட்டிற்கு வந்தேன் எனது மருமகன் பணிக்கு சென்றிருந்தார். அன்றைய தினம் EB யில் இருந்து 10 பணியாளர்கள் வந்திருந்தார். அப்போது என்னிடம் யாரும்மா ஓனர் என்று கேட்டார்கள். அவர் பணிக்கு சென்றுள்ளார் என்று கூறினேன். வந்திருந்த EB ஊழியர்கள் எங்கள் வீட்டிற்கு வந்து என்னிடம் 2–ம் எதிரியின் கடைக்கு அருகில் இருந்த மின் கம்பத்தில் கட்டியிருந்த தகரத்தை அகற்றி தருமாறு கேட்டார்கள். என் மகளும் அப்போது வீட்டில் இருந்தார். நான் அங்கு சென்று குட்டி என்ற சுகுமாரின் கடையில் இருந்த அவரது அம்மாவிடம் அந்த தகரத்தை அகற்றி தருமாறு கூறினேன். அதற்கு அவர் கடையில் தன் மகன் இல்லை என்றும் அதனால் தகரத்தை அகற்ற முடியாது என்றும் மகன் வந்த பிறகு சொல்கிறேன் என்றும் சொன்னார். நான் மடத்தில் உள்ள வீட்டிற்கு வந்து விட்டேன் கொஞ்ச நேரத்தில் 2–ம் எதிரி என் வீட்டிற்கு வந்து என்னிடம் என்னடி கிழவி என் அம்மாவிடம் பேசியிருக்கிறார் என்று சொல்லி ஓங்கி என்னை அடித்து விட்டார். அது பற்றி என் மகள் கேட்டதற்கு அவளையும் 2–ம் எதிரி அடித்து விட்டார். அதன்பிறகு என் மருமகன் வந்து விட்டார். அவர் வந்து எங்களை அடித்தது சம்பந்தமாக 2–ம் எதிரியிடம் கேட்டார். அப்போது 2–ம் எதிரி குட்டி என்ற சுகுமார் என் மருமகனின் கையை பிடித்துக் கொண்டார். 1–ம் எதிரி ஐய்யப்பன் கத்தியால் என்

மருமகனின் இடது பக்க த்தில் குத்தினார். மடத்தில் இருந்தவர்கள் ஐயோ அம்மா என்று சத்தம் போட்டார்கள் என் மருமகனை பழனி அரசு மருத்துவமனைக்க கொண்டு சென்றார்கள் . போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை : இல்லை.

JJEYASUTHAHAR Digitally signed by JJEYASUTHAHAR Date: 2023.02.01 17:49:31 +0530